29.01.2026

LAOP.No.5/2022

ம. சா. 5 முத்துச்சாமி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :–

நில ஆர்ஜிதம் செய்த நிலம் பூசாரிபட்டி கிராமத்தில் சர்வே எண்.45/1ல் 3722 சதுர மீட்டர் சர்வே எண்.42/1சில் 343 சதுரமீட்டர் விவசாய நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நிலங்கள் விவசாய நிலங்கள் என்றால் சரிதான். அந்த இடத்தில் மரங்கள் இருந்தது. அதனை எனது எதிர்வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். பூசாரிபட்டி கிராமம் சர்வே எண்.164/6 நிலம் என் நிலத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றால் 1/2 கி.மீ. தூரம் இருக்கும். மேற்படி சர்வே எண் என் நிலத்திலிருந்து ஏறத்தாழ 2 கி.மீ. தொலைவில் உள்ளது என்றால் சரியல்ல. அவார்டு தொகை கொடுப்பதற்கு முன்பு எனக்கு அழைப்பாணை அனுப்பியிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு நான் ஆஜரானேன். அந்த விசாரணையில் நான் ஆட்சேபனை செய்தேன். அதாற்கு அவர்கள் கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு போதவில்லை என்றால் வழக்கு போட்டுக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். அந்த விசாரணையில் எனக்கு சாதக பாதகத்தை விளக்கிக்கூற சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என் நிலத்திற்கு சரியான முறைப்படி சந்தைமதிப்புத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்லை. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.01.29 17:19:48 +0530

Principal District Judge,
Dindigul.